
# தரம் 10






# தமிழ் மொழியும் இலக்கியமும்

## இருபதாம் நூற்றாண்டு தமிழ் கவிதை

Mr.M.Navaneethan BA,PGDE,PGD in Tamil
CP/MT/Kandenuwara T.M.V – Matale.

# உள்ளே.....



- ❖ இருபதாம் நூற்றாண்டு தமிழ் கவிதை
- ❖ இருபதாம் நூற்றாண்டு கவிஞர்கள்
- ❖ கவிஞர்களும் கவிதை உள்ளடக்கங்களும்
- ❖ கவிதை பிரசாரத்தில் இதழ்களின் பங்களிப்பு
    - எழுத்து இதழ்
    - கசடதபற இதழ்
    - வானம்பாடி இதழ்

# இருபதாம் நூற்றாண்டு தமிழ் கவிதை



- இக்கட்டுரையின் ஆசிரியர் **கவிக்கோ அப்துல் ரகுமான்.**
- அப்துல் ரகுமான் மதுரையில் 1937 நவம்பர் ஒன்பதாம் திகதி பிறந்தார்.
- அப்துல் ரகுமான், தமிழ்நாட்டைச் சேர்ந்த கவிஞரும், தமிழ்ப்பேராசிரியரும் ஆவார்.
- கவிக்கோ என்று சிறப்பாகக் குறிப்பிடப்படுகிறார்.


- **பால்வீதி** என்ற கவிதைத் தொகுதி மூலம் தம்மை ஒரு சோதனைப் படைப்பாளியாக இனங்காட்டிக் கொண்டார்.
- 1960 க்கு பின் கவிதை உலகுக்கு வந்த இவர் கவியரங்கக் கவிதைகளாலும் சிறப்படைந்துள்ளார். சிலேடை வார்த்தைகளால் கேட்போரைக் கவர்வது இவரது பாணி. வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணி புரிந்தவர்.



பாரதியார்



பாரதிதாசன்



கவிமணி



சுத்தானந்த பாரதி

# இருபதாம் நூற்றாண்டு கவிதை

- தமிழ் கவிதைக்கு வசந்தகாலம்
- வடிவத்திலும் வண்ணத்திலும் வகை வகையான கவிதைகள் மலர்ந்து புதிய பாதைக்கு சென்றது
- மரபுக் கவிதையிலிருந்து அரசனை பாடிய கவிதைகள் சமூகத்தின் தேவைகளாக பாடத் தொடங்குகிறது.
- இந்த வசந்தத்தை பாடும் குயிலாக பாரதியின் குரல் ஒலித்தது.

## பாரதியார்




- கவிதையை மக்களின் பொதுவுடமை ஆக்கினார்.
- நாட்டுப்பற்றும் தேசியமும் பாடுபொருளாகக் கொண்டு மக்களிடம் எளிமையாகப் பேசினார்.
- பழம் புலவர்களின் விருத்தங்களை விட மக்கள் பாடலான சிந்து வடிவத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தார்.
- இந்திய விடுதலை, அரசியல் விடுதலை, சமூக விடுதலை, பெண் விடுதலை, தொடர்பாக பாடினார்.
- பாரதமாதாவை சக்தியின் வடிவமாகக் கண்டார்.
- பாரதி கண்ட கனவு சமத்துவ சமரச சகோதரத்துவ புதுயுகத்தின் குறியீடானது.
- பாரதியின் புரட்சி பார்வையை பாஞ்சாலி சபதத்தில் காணமுடிகிறது.
- வசனகவிதைக்கு வித்திட்டவர்.

## பாரதி தாசன்



- விடுதலைப் போராட்டம், சுதந்திர விடுதலை, நாத்திகம் என்பவற்றை கவிதையின் பாடுபொருள் ஆக்கி பாடினார்.
- சமூக சீர்திருத்தத்தை வெளிப்படுத்தியும் உழைக்கும் மக்கள் பற்றியும் தமது கவிதைகளில் பாடினார்.
- பாரதி தொடாத விதவை மறுமணம் பற்றியும் குழந்தை மணக்கொடுமை பற்றியும் பாடினார்.
- காதல் கவிதையிலும் சீர்திருத்தக் கருத்துக்களையும் முன்னெடுத்தார்
- சமவுடைமை சமுதாயக் கொள்கையை பாடினார்.

## கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை



- பாரதிக்கு பின் வந்தவர்.
- குழந்தைகளுக்காக கவிதை எழுதினார்.
- பின் எட்வின் ஆர்னால்டின் **ஆசிய ஜோதி**யையும் உமர்கய்யாமின் **ருபாயியாத்**தையும் தமிழில் தந்தார்.
- தம் நெஞ்சில் நாட்டு மருமக்கள் வழிமான்மியம் மருமக்கள் தாய்வழியில் என்ற கொடிய பழக்கத்தை மாற்ற காரணமாக இருந்தவர்

## பின் வந்த கவிஞர்கள்

### ❖ நாமக்கல் இராமலிங்கம்

- தமிழிசை இயக்கத்தின் பிரசாரகரானார்.
- ‘**அவனும் அவளும்**’ என்ற நூலில் புதிய புதினத்தை கவிதை நடையில் தந்தார்.

### ❖ சுத்தானந்த பாரதியார்

- வால்ட் விட்மன், பிரான்சிஸ் தாம்ப்ஸன், வில்லியம் பிளேக், தாந்தே போன்ற கவிஞர்களை தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்.
- பாரத சக்தி மகா காவியம் வரவிருக்கும் அதி மனிதனை சித்திரிக்கும் நவீன ஆன்மீக காவியமாக கொள்ளப்படுகின்றது.

## சுரதா

- முடியரசன்,வாணிதாசன், சுரதா ஆகியோர் பாரதிதாசன் வழிவந்தவர்கள்.
- தமிழில் வித்தியாசமான அறிகுறிகள் கவிதைகளுக்கு வித்திட்டவர்.
- உவமை கவிஞர் என்ற பட்டத்தைப் பெற்றவர்.


## கம்பதாசன்

- பெண்மை நலம் கனிய பூப்போன்ற கவிதைகளை தொடுத்தவர்.
- சமூகவுடைமை பிரசாரத்தைக்கூட வறண்ட முழக்கம் ஆக்கி விடாமல் கவிதை தந்தவர்.

## பிச்சைமூர்த்தி

- வாட் விட்மன், பாரதி ஆகியோரின் தாக்கத்தால் 1930களில் புதுக்கவிதை எழுதத் தொடங்கினார்
- தமது கவிதைகளில் உள்ளடக்கத்தை விட உருவத்தில் நவீனத்தை கண்ட கையாண்டார்.

## கவிதை பிரசாரத்தில் இதழ்களின் பங்களிப்பு




1. எழுத்து இதழ்
2. கசடதபற இதழ்
3. வானம்பாடி இதழ்

### எழுத்து

- 1957இல் தொடங்கப்பட்டது.
- சி.சு.செல்லப்பா 1962இல் புதுக்குரல்கள் என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டார்.
- தருமு சிவராமு ஒருவரே கவித்துவத்தால் பிரகாசித்தவர்.
- சி.மணி,பசுவய்யா, வைத்தீஸ்வரன், தி.சோ வேணு கோபாலன், டி.கே துரைஸ்சாமி ஆகியோர் எழுத்து இதழில் எழுதியவர்




## கசடதபற

- 1970 இல் வெளிவந்தது.
- ஞானக்கூத்தன், கலாப்ரியா, கல்யாண்ஜி போன்றோர் அறிமுகமாயினர்
- கவிதைகளின் உள்ளடக்கம், உத்தி, உருவகம் ஆகியவற்றுள் நவீனத்துவம் இருந்தது இவற்றுள் பெரும்பாலானவை தமிழ் கவிதை மரபுக்கும் உணர்வுக்கும் அந்நியப்பட்டு நிற்கின்றன.
- சிலர் மேலைநாட்டு கவிஞர்களை பார்ப்பது போல செய்தலில் இறங்கினர்.
- இதில் நம் மண்ணுக்கு பொருந்தாத விரக்தி, அவநம்பிக்கை, அராஜகம், வக்கிரம், ஆபாசம் ஆகிய மனோநிலைகள் வெளிப்படுத்தப்பட்டது.
- ஆகவே இக்காலகட்டம் கவிதையில் இருண்மை உண்டாகியது.

## வானம்பாடி

- 1971 இல் வெளிவந்தது.
- கசடதபற கவிதைகளில் இருண்மையைப் போக்க தோன்றியதே வானம்பாடி ஆகும்.
- சமூக அநீதிகளுக்கு எதிராக கவிதைகள் பாடப்பட்டது.
- சிற்பி, மீரா, நா.காமராசன், மு.மேத்தா, புவியரசு, இன்குலாப், தமிழன்பன் முதலியோர் மரபு கவிதைகள் எழுதி பிரபலமானவர்களாக இருந்தாலும் புதுக்கவிதை பரவுவதற்கு இவர்களே காரணமாக இருந்தனர்.
- வானம்பாடியில் பெரும்பாலோரின் கவிதை வசன கவிதையாகக்கூட இல்லாமல் வெறும் வசனமாக வறட்டு முழக்கமாக நீர்த்துப் போனது.



அப்துல் ரகுமான்



மு.கருணாநிதி

- இக்குழுக்களோடு அல்லாமல் தனக்கென தனி பாணியை அமைத்துக் கொண்டவர்கள் அப்துல் ரகுமானும் அபியும்
- கலைஞர் கருணாநிதி அவர்களால் தமிழகமெங்கும் அண்ணா கவியரங்கங்கள் அமைக்கப்பட்டது.
- இதில் அரசியல் கேட்க வந்த இலட்சக்கணக்கானோரை கவிதை இரசிகர்களாக உருவாக்கினார்
- மற்ற யாரும் எழுதாத வசன நடையில் கலைஞர் கருணாநிதி எழுதினார்

## ஹைகூ

- இந்த ஹைகூ கவிதை கிராமத்து வட்டார வழக்கில் ஒலித்தது.
- தலித்தியமும் பெண்ணியமும் கவிதையில் ஒலிக்கத்தொடங்கியிருந்தன.

## திரைப்படப் பாடல்கள்

- திரைப்பட பாடல்களையும் இலக்கியமாக மதித்தாக வேண்டிய நிலையை உண்டாக்கினார் கண்ணதாசன் அவர்கள்.
- உடுமலை நாராயணகவி பகுத்தறிவை பாடினார்.
- உழைக்கும் வர்க்கத்தின் பாடிய பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

## வினாக்கள்

1. இருபதாம் நூற்றாண்டு தமிழ்க்கவிதை கட்டுரையின் ஆசிரியர் யார்?

   அப்துல் ரஹ்மான்

2. மகாகவி பாரதி பாட எடுத்துக் கொண்ட விடயங்கள் யாவை?

   நாட்டுப்பற்றும் தேசியமும் பாடுபொருளாகக் கொண்டு பாடினார்.

   இந்திய விடுதலை, அரசியல் விடுதலை, சமூக விடுதலை, பெண் விடுதலை, தொடர்பாக பாடினார்.

   பாரதமாதாவை சக்தியின் வடிவமாகக் கண்டார்.

   சமத்துவ சமரச சகோதரத்துவ புதுயுகத்தின் குறியீடானது கொண்டு பாடினார்.

   புரட்சி பார்வை (பாஞ்சாலி சபதம்)

3. பாரதிதாசன் பாட எடுத்துக் கொண்ட விடயங்கள் யாவை?

விடுதலைப் போராட்டம் சுதந்திர விடுதலை, நாத்திகம் என்பவற்றை கவிதையின் பாடுபொருள் ஆக்கி பாடினார்.

சமூக சீர்திருத்தத்தை வெளிப்படுத்தியும் உழைக்கும் மக்கள் பற்றியும் தமது கவிதைகளில் பாடினார்.

பாரதி தொடாத விதவை மறுமணம் பற்றியும் குழந்தை மணக்கொடுமை பற்றியும் பாடினார்.

காதல் கவிதையிலும் சீர்திருத்தக் கருத்துக்களையும் முன்னெடுத்தார்

சமவுடைமை சமுதாயக் கொள்கையை பாடினார்.

4. ஆசிய ஜோதி தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?

கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை

5. ‘அவனும் அவளும்’ என்ற புதினத்தை கவிதை நடையில் தந்தவர் யார்?

நாமக்கல் இராமலிங்கம்

6. இக்கட்டுரையில் மேலைநாட்டு கவிஞர்களாக அறிமுகப்படுத்தபடுபவர்கள் யாவர்?

வால்ட் விட்மன்

பிரான்ஸிஸ் தாம்ப்ஸன்

வில்லியம் பிளேக்

தாந்தே

7. உவமை கவிஞர் என சிறப்பித்து அழைக்கப்படுபவர் யார்?

சுரதா

8. கவிதை வளர்ச்சியில் பங்களிப்பு செலுத்திய இதழ்கள் யாவை?

எழுத்து
கசடதபற
வானம்பாடி

9. எழுத்து இதழில் எழுதிய கவிஞர்கள் யாவர்?

சி.மணி, பசுவய்யா, எஸ்.வைத்தீஸ்வரன், தி.சோ.வேணு கோபாலன், டி.கே. துரைஸ்வாமி

10. கசடதபற இதழில் எழுதிய கவிஞர்கள் யாவர்?

ஞானக்கூத்தன், கலாப்ரியா, கல்யாண்ஜி

11. வானம்பாடி கவிஞர்கள் தம்மை எவ்வாறு அறிமுகப்படுத்திக் கொண்டார்கள்?

'மானுடம் பாடும் வானம்பாடி' என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார்கள்

12. வானம்பாடி இதழில் கவிதை தந்தவர்கள் யாவர்?

சிற்பி

மீரா

மு. மேத்தா

புவியரசு

இன்குலாப்

தமிழன்பன்

13. ‘திரைப்படப் பாடல்களும் இலக்கியமே’ என்ற அளவுக்கு உயர்த்தியவர்கள் யாவர்?

கண்ணதாசன்

உடுமலை நாராயணகவி

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

நன்றி